# ஆசிரியர் தேர்வு வாரியம்

அறிவிக்கை எண் : 03B/2025 நாள்: 26.02.2026

## ADDENDUM

ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.03/2025 நாள்:11.08.2025-இன்படி, தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வுகள் தாள்-I 15.11.2025 அன்றும், தாள்-II 16.11.2025 அன்றும் நடைபெற்றன.

அரசாணை (நிலை) எண். 23, பள்ளிக்கல்வித்துறை, நாள். 28.01.2026ன்படி, தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் கீழ்கண்டவாறு அரசால் மாற்றி அமைக்கப்பட்டது.

| Category | Maximum Marks | Minimum Marks (%) to be obtained in TNTET | |
|---|---|---|---|
| | | Paper-I | Paper-II |
| General | 150 | 60% or 90 Marks | 60% or 90 Marks |
| BC, BC(M), MBC/ DNC, PWD | 150 | 50% or 75 Marks | 50% or 75 Marks |
| SC, SC(A), ST | 150 | 40% or 60 Marks | 40% or 60 Marks |

இவ்வரசாணையில் ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.03/2025-இன்படி நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்விற்கும் பின்பற்றுமாறு அனுமதி அளிக்கப்பட்டதால் 11.08.2025 நாளிட்ட அறிவிக்கைக்கு பிற்சேர்க்கை அறிவிக்கை எண் (Addendum). 03A/2025 நாள்.29.01.2026இல் இவ்வாரியத்தால் வெளியிடப்பட்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன.

இந்நிலையில், அரசாணை (நிலை) எண். 46, பள்ளிக்கல்வித்துறை, நாள். 25.02.2026இல் ஆசிரியர் தகுதித் தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் 40% ஆக நிர்ணயித்து அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வரசாணையினை ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.03/2025-இன்படி, நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்விற்கும் பின்பற்றுமாறு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, 29.01.2026 நாளிட்ட பிற்சேர்க்கை அறிவிக்கை எண் (Addendum). 03A/2025இல் தெரிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-I மற்றும் தாள்-IIக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் மேற்காண் அரசாணையின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு பின்பற்றப்பட்டு தகுதித்தேர்விற்கான முடிவுகள் வெளியிடப்படும்.

தலைவர்